# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.67 /2020 நாள். 30.09.2020

## தனி அலுவலர் அவர்களின் நவம்பர் 2020 மாதம் சாதராண கூட்டப்பொருள்

30.11.2020ம் நாள் திங்கள்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் நவம்பர் 2020 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | நவம்பர் 2020 | 0 | 0 | 0 | 0 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் நவம்பர் மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேற்படி ஆய்வுக் கூட்டத்தில், கொசு ஒழிப்பு மருந்துகள் போதிய அளவில் இருப்பு வைத்துக்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டன. தற்போது பொது சுகாதார பிரிவில், கொசு ஒழிப்பு மருந்துகள் இருப்பில் குறைவாக உள்ளதால், கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை தீவிரப்படுத்த பைத்திரம் 2% என்ற புகை மருந்து 100 லிட்டரும், டெமிபாஸ் 50% 100 லிட்டர் பொது மேலாளர், தமிழ்நாடு மெடிக்கல் சர்வீசஸ் கார்ப்பரேசன் லிமிடெட், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது இதற்காகும் உத்தேச செலவு ரூ.2.20 இலட்சம் ஆகும்.

**அலுவலக குறிப்பு :** பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று கொசு ஒழிப்பு மருந்துகளை சப்ளை செய்ய பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.4**

29.10.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டிற்கு) | |
|---|---|---|---|---|
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | விகிதம் |
| 1. | 2020–21ம் ஆண்டிற்கு வார்டு எண்.1 முதல் 18 வரையுள்ள வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 32.85 | மெசஸ். சாமுராய் இண்டஸ்ரியல் எலக்ட்ரிகல்ஸ்<br>மெசஸ். லட்சுமி எண்டர்பிரைசஸ்<br>மெசஸ். சன்வீயுவ் எண்டர்பிரைசஸ் | 7.68 % அதிகம்<br>0.17 % குறைவு<br>0.95 %அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள மெசஸ். லட்சுமி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.5**

28.10.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டிற்கு) | |
|---|---|---|---|---|
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | விகிதம் |
| 1. | நகராட்சி பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள 50 பணியாளர்களை சப்ளை செய்தல் பணி | 35.00 | மெசஸ். பேன்சி ஏஜென்சி | 1.03 % குறைவு |

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி பணிக்கு மெசஸ். கிரீன் ட்ரீ நிறுவனத்தினர் தொழில் நுட்ப தகுதி பெறவில்லை.
2. மேற்படி பணிக்கு தொழில் நுட்ப தகுதிக்கான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளதில் தொழில் நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் மெசஸ். பேன்சி ஏஜென்சி நிறுவனத்தினர் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக உளளதால் மெசஸ். பேன்சி ஏஜென்சி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண். 6</u>

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் தொழில் புரிபவர்களுக்கான தொழில் உரிம கட்டணம் தமிழ்நாடு அரசு கோயம்புத்தூர் மாவட்ட அரசிதழ் பதிவு எண்.344 மார்ச் 2013ன்படி நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. மேற்படி கட்டணத்தை திருத்தி அமைத்து தீர்மான எண்.248 ாநள் 30.11.2017ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2018 2019ம் நிதியாண்டு முதல் வசூலிக்க மேல்நடவடிக்கை எடுக்க மன்ற அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி 2018 2019ல் அனைத்து வணிக நிறுவனங்களும் சேவைக்கட்டணம் நிர்ணயம் செய்ய அறிவுறுத்தப்பட்டதால் தீர்மான எண்.385 நாள் 10.8.2018ன்படி மன்ற அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. எனவே தீர்மான எண்.248 நாள் 30.11.2017ல் அனுமதிக்கப்பட்ட கட்டண உயர்வினை தற்காலிகமாக நிறுத்தி வைத்திட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி